1967 ஜூலை 13]

நில உச்சவரம்பு--

முற்பகல் 10–00

*308 வினா—திரு. வி. கே. கோதண்டராமன் :
திரு. கரு. சீமைச்சாமி :
திரு கே. ஆர். ஞானசம்பந்தன் :
} மதிப்பிற்குறிய உணவு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) நில உச்சவரம்பு சட்டம் எந்த ஆண்டில் நிறைவேற்றப்பட்டது ?

(இ) அது எப்போது அமுல் படுத்தப்பட்டது ?

(உ) அதன் மூலம் கிடைத்த மிச்ச நிலம் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) தமிழ்நாடு 1961-ம் ஆண்டு நிலச்சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு நிர்ணய) சட்டம் (தமிழகச் சட்டம் 58/1961) 1962-ம் ஆண்டு மே திங்களில் தமிழக அரசிதழில் வெளியாயிற்று.

(இ) இது 6–4–1960-ல் இருந்தே பயன் தரும் வகையில் செயலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. (இது மூல மசோதா வெளியிடப்பட்ட தேதியாகும்.)

(உ) 1–3–1967-ல் இச்சட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்ட உபரி நிலம் 24,351 ஏக்கர் ஆகும். (நன்செய் 9,167 ஏக்கர், புன்செய் 15,184 ஏக்கர்).

*309 வினா—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா.

கோயில்களுக்கும், மடங்களுக்கும் சொந்தமான நிலங்களுக்கு உச்சவரம்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இல்லை.

*310 வினா.—**திரு. கரு. சீமைச்சாமி :** மதிப்பிற்குரிய உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :

(அ) சென்னை நில உடமை உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் உபரியாக கிடைத்த நிலங்களுக்கு நஷ்டஈடு கொடுக்க நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளதா ?

(இ) ஆம் என்றால், அதன் விபரம் என்ன ?

THE HON. THIRU K. A. MATHIALAGAN (*a*) Yes.

(*b*) The Madras Land Reforms (Compensation for surplus Land) Rules, 1966, which were placed on the table of the House on 27th March 1967 provide the mode of payment of compensation bonds.

திரு. வி. கே. கோதண்டராமன் : இந்த உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் கிடைத்த மிச்ச நிலங்களை எந்த எந்த விவசாயிகளுக்கு தொழிலாளர் களுக்கு எந்த அளவு பங்கீடு செய்யப்பட்டிருக்கிறது ? இல்லை என்று சொன்னால் எப்போது? எந்த அடிப்படையில் விநியோகம் செய்வதாக உத்தேசம் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மொத்தம் 23 ஆயிரம் ஏக்கராவில் 16 ஆயிரம் ஏக்கரா தான் சுவாதீனப்படுத்தப்பட்டது நம் அரசாங்கத்தால். அவற்றில் 14,546 ஏக்கராக்கள், 6,770 விவசாயிகளுக் குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. ஆர். ஞானசம்பந்தம் : ஐயா, 30 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று வரம்பு கட்டியதனால் அதிக நிலங்கள் கிடைக்கவில்லை என்ற காரணத்தினால், அதை 20 ஸ்டாண்டர்ட் ஏக்கராகக் குறைத்து, விதிவிலக்கு களை ரத்து செய்து கோவில், மடங்களுக்குச் சொந்தமான நிலங்களையும் இந்தச் சட்ட வரம்புக்குள் கொண்டு வருவார்களா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : நில உச்சவரம்புச் சட்டம் இன்னும் எப்படி எல்லாம் திருத்தப்பட வேண்டுமென்று நாம் முன் கூட்டிப் பேசிக்கொண்டிருப்பது அப்படிப்பட்ட சட்டங்களில் இருந்து மக்கள் தப்புவதற்கு யோசனை சொல்வதாக அமைந்துவிடும்.

திரு. வி. கே.கோதண்டராமன் : திருத்தப்படுவதை வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். அதே நேரத்தில் மடங்களுக்கும், கோவில்களுக்கும் உச்ச வரம்புச் சட்டம் பொருந்தாதா ? அவர்கள் ஹைக்கோர்ட் வரையில் சென்று அந்த வழக்கின் தீர்ப்பு அடிப்படையில் அந்த நிலங்களுக்கு உச்ச வரம்புச் சட்டம் வரவில்லையா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மடங்கள் முதலியவற்றின் விவகாரத்தில 'Madras Public Trusts (Regulation of Administration of Agricultural Lands) Act, 1961' விதியின் கீழ் இப்போது 20 ஏக்கரா வுக்கு மேல் நிலம் இருந்தால் 'the trustee of the Public Trust shall lease out the lands in such excess to—

(i) a co-operative farming society ; or

(ii) any person who is already a cultivating tenant : or

(iii) any person who not being already a cultivating tenant. executes an agreement with the public trust that he will contribute his own physical labour or that of any member of his family in the cultivation of the land so leased out to him . . . , (கொடுத்து வருகிறார்கள்). ஆகவே, அவை தர்ம ஸ்தாபனங்களின் சட்டப்படி விதிவிலக்குப் பெற்று விடுகின்றன. அதுபற்றி சட்ட சம்பந்த மாகத்தான் ஆலோசனை செய்யவேண்டும்.

வீட்டுக்கு உச்சவரம்பு நிர்ணயம்

***311 வினா—திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய உணவு-வருவாய்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதி லளிப்பாரா—

(அ) வீட்டுக்கு உச்சவரம்பு நிர்ணயிக்கும் பொருட்டு சட்டம் கொண்டு வரும் உத்தேசமுண்டா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) தற்சமயம் (at present) இல்லை.

(இ) இவ் வினாவிற்கு இடமில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : தற்சமயம் இல்லை என்று சொன் னாலும் மற்ற நிலத்திற்கோ, மற்றவைகளுக்கோ உச்சவரம்பு கொடுத்துக் கொண்டு வரக்கூடிய நேரத்தில் வீடுகளைக் கட்டி, வாடகைக்கு விட்டு, கொள்ளை லாபம் அடிக்கக்கூடிய அளவில் நிலைமை வளர்ந்து வருகிறது அல்லவா ? ஆகவே உடனடியாக, கண்டிப்பாக வீடுகளுக்கும் உச்சவரம்பு கட்ட ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : தற்சமயம் இல்லை என்று அளிக்கப்பட்ட பதிலிலேயே, எதிர்காலத்தில் இருக்கலாம் என்ற பதில் தொக்கியிருக்கிறது.